# சோளிங்கர் நகராட்சி

## 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10– ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்

**தலைமை :– திருமதி தமிழ்செல்வி அசோகன் நகர்மன்றத் தலைவர்**

| மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 10.11.2023 | **பொருள்எண்.1**<br>வடக்கிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பொது மக்களுக்கு மற்றும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்க 150 கிலோ நிலவேம்பு பவுடர் சப்ளை பெறவும் தோராய செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு :–<br>1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் அதற்கான செலவின தொகையையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1188/2023/எச்1) | நகர்மன்றத் தீர்மான எண்.511 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 10.11.2023 | **பொருள்எண்.2**<br>திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வளமீட்பு பூங்காவில் தினசரி சேகரமாகும் ஈரக்கழிவுகளை உரமாக்கும் பணி மேற்கொள்ள தேவையான E.M Solution 300 Ltr கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ளவும் அதற்குண்டான தோராய செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு :–<br>1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதையும் அதற்கான செலவின தொகையையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1189/2023/எச்1) | நகர்மன்றத் தீர்மான எண் .512 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>10.11.2023</td>
<td>

**<u>பொருள்எண்.3</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.3088/2023/அ5, நாள்.27.07.2022 தேதிய கடிதத்தில் நகராட்சி பகுதியில் உள்ள நுண்ணுயிர் உரமாக்கல் மையத்தில் உற்பத்தி செய்யப்படும் இயற்கை உரத்தினை "செழிப்பு பசுமை உரம்" என்ற பெயரில் விற்பனை செய்ய தெரிவித்துள்ளதற்கிணங்க இந்நகராட்சி பகுதியில் நுண்ணுயிர் உரமாக்கல் மையத்தில் இருந்து சேகரித்து உரத்தின் சத்து அளவு குறித்து தரநிலைக்கான பகுப்பாய்வு அறிக்கையினை தமிழ்நாடு வேளாண்துறை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், மதுரை என்ற நிறுவனத்திடம் பெற தொகை ரூ.3850/– ஆகும் செலவின தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு :–

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.1045/2023/எச்1)

</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண் .513 ஒப்புதல் அளிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>10.11.2023</td>
<td>

**<u>பொருள்எண்.4</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை–28 அவர்களின் கடிதம் ந .க.எண்.9192/2022/தூஇதி1, நாள்.21.08.2023 –ல் சோளிங்கர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 2023–24 திட்டத்தின் கீழ் தொகை ரூ .43.25 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 06.10.2023–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணியின் பெயர்</th><th>மொத்த மதிப்பீடு ரூ.இலட் சத்தில்</th><th>குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th><th>அதிகம் அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 கழவு நீர் ஊர்தி கொள்முதல் செய்யும் பணி</td><td>43.25</td><td>Sakthi Body Works, 0.01 % மதிப்பீட்டை விட குறைவு</td><td>Senthil Murugan Works 0.58% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>

**அலுவலக்குறிப்பு :–**

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.137/2023/இ1)

</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண் 514 ஒப்புதல் அளிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td>10.11.2023</td><td>

**<u>பொருள்எண்.5</u>**

சோளிங்கர் நகராட்சியில் பொது நிதி 2023–2024 கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 18.10.2023–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணியின் பெயர்</th><th>தொகை ரூ.</th><th>குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th><th>அதிகம் அளிக்கப்பட் ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள் ளி சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>நகராட்சியில் கருத்தடை சிகிச்சை மையம் (ABC) ஏதுமில்லாம காரணத்தால் நகராட்சியில் உள்ள ஆடு அடிக்கும் தொட்டியினை தற்காலிமாக மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பணி</td><td>1,50,000</td><td>எஸ்.எல்.பாபு<br>0.25 %<br>மதிப்பீட்டை விட குறைவு</td><td>எம்.ரகு<br>0.75%<br>மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>

அலுவலக்குறிப்பு :–

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.192/2023/இ1)
</td><td>நகர்மன்றத் தீர்மான எண் 515 ஒப்புதல் அளிக்கப்பட்டது</td></tr>
<tr><td>10.11.2023</td><td>

**<u>பொருள்எண்.6</u>**

சோளிங்கர் நகராட்சியில் பொது நிதி 2023–2024 கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 19.10.2023–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணியின் பெயர்</th><th>தொகை ரூ.</th><th>குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th><th>அதிகம் அளிக்கப்பட் ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள் ளி சதவீதம்</th></tr>
</table>
</td><td>நகர்மன்றத் தீர்மான எண் 516 ஒப்புதல் அளிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | சோளிங்கர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு பொது மருத்துவமனையில் புதிய கட்டிடம் கட்ட ரூ.5.75 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணி மேற்கொள்ள இருப்பதால் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி | 11.00,000 | Glency DocmraConsultants India Pvt Ltd, Chennai 0.10 % மதிப்பீட்டை விட குறைவு | Eclat Designs Infrastructure Pvt Ltd, Chennai 0.50% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக்குறிப்பு :-

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.655/2023/இ1)

10.11.2023

**<u>பொருள்எண்.7</u>**

சோளிங்கர் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2022-2023 கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 31.10.2023-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பணியின் பெயர் | தொகை ரூ. | குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | அதிகம் அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.24 கொண்டபாளையம் அன்னதான சத்திரம் ரோடு மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி | 6.19,000 | எஸ்.எல்.பாபு 0.25 % மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.75% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக்குறிப்பு :-

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.210/2023/இ1)

நகர்மன்றத் தீர்மான எண் .517 ஒப்புதல் அளிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 10.11.2023 | **<u>பொருள்எண்.8</u>**<br>சோளிங்கர் நகராட்சி கொண்டபாளையம் பகுதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், சோளிங்கர் வட்டம், இராணிப்பேட்டை மாவட்டம், உதவி ஆணையர், செயல் அலுவலர் அவர்களின் ந.க.எண்.387/2023/அ1, நாள்.27.10.2023 தேதிய கடிதத்தில் அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றானதும். ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட வைணவத்திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் முக்கிய திருவிழாவான கார்த்திகை மாத திருவிழா இவ்வாண்டு 17.11.2023 முதல் 17.12.2023 முடிய நடைபெற உள்ளதால் மேற்கண்ட திருவிழாவிற்கு பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருவார்கள் என எதிர்நோக்கப்படுகிறது, எனவே பொதுமக்களின் அத்தியாவசிய பயன்பாட்டிற்கு தேவையான தற்காலிக கழிவறை அமைத்தல் பணி நகராட்சி மூலமாக செய்து கொடுக்குமாறு கோரியுள்ளார், நகராட்சி பகுதியில் கோளாத்தம்மன் திருவிழா, சித்திரைமாத தேர்விழா மற்றும் கார்த்திகை மாத திருவிழா நடைபெறுகிறது, மேற்படி திருவிழாக்கள் நடைபெறும் போது நகராட்சி மூலம் திருவிழா காலங்களில் தற்காலிக கழிவறைகள் அமைத்து கொடுக்க வேண்டியுள்ளது, எனவே 6 எண்ணிக்கையில் கொண்ட கழிவறைகள் கொள்முதல் செய்து திருவிழா காலங்களில் பயன்படுத்திக் கொள்ள ஆகும் தோராய செலவினம் தொகை ரூ.6.00 இலட்சம் ஆகும். செலவினத் தொகைக்கும் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக்குறிப்பு :-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. 17.11.2023 தேதிக்கு முன்னர் தற்காலிக கழிவறைகளை அமைத்து கொடுக்க வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை எடுத்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.702/2022/இ1) | நகர்மன்றத் தீர்மான எண் **518** ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 10.11.2023 | **<u>பொருள்எண்.9</u>**<br>சோளிங்கர் நகராட்சி கொண்டபாளையம் பகுதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில், சோளிங்கர் வட்டம், இராணிப்பேட்டை மாவட்டம், உதவி ஆணையர், செயல் அலுவலர் அவர்களின் ந.க.எண்.387/2023/அ1, நாள்.27.10.2023 தேதிய கடிதத்தில் அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றானதும். ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட வைணவத்திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் முக்கிய திருவிழாவான கார்த்திகை மாத திருவிழா இவ்வாண்டு 17.11.2023 முதல் 17.12.2023 முடிய நடைபெற உள்ளதால் மேற்கண்ட திருவிழாவிற்கு பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருவார்கள் என எதிர்நோக்கப்படுகிறது, கொண்டபாளையம் பகுதியில் உள்ள அனைத்து தெருக்கள் மற்றும் சாலைகளில் இரண்டு பக்கமும் உள்ள பொதுமக்களுக்கு இடையூராக இருக்கும் முட்புதர்கள் மற்றும் புல்செடி கொடிகளை அகற்றி கொடுக்குமாறு கோரியுள்ளார், அதனடிப்படையில் மேற்படி பகுதியில் உள்ள சாலைகளின் இரண்டு பக்கமும் உள்ள முட்புதர்களை அகற்றி கொடுக்கவும், சாலைகளை சிறு பழுதுகளை சரிபார்த்து கொடுக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1.50 இலட்சம் ஆகும். செலவினத் தொகைக்கும் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் | நகர்மன்றத் தீர்மான எண் **.519** ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக்குறிப்பு :–<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. 17.11.2023 தேதிக்கு முன்னர் முட்புதர்கள் மற்றும் புல்செடி கொடிகளை அகற்றவும், பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள சாலைகளின் சிறு பழுதுகளை சரிபார்த்து கொடுக்க வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி மேல் நடவடிக்கை எடுத்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.702/2022/இ1) | |
| 10.11.2023 | **<u>பொருள்எண்.10</u>**<br>சோளிங்கர் நகராட்சியில் பொன்னை ஆற்றில் இருந்து நீருற்று கிணறுகளில் பெறப்படும் குடிநீர் நகராட்சி பகுதிகளில் உள்ள 27 வார்டுகளில் 9 வார்டுகளுக்கு நகராட்சி அலவலகத்தில் பின்புறம் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி சேகரம் செய்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மற்ற 18 வார்டுகளில் அந்தந்த பகுதிகளில் உள்ள நீர் ஆதாரத்தின் மூலம் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு அதே பகுதியில் உள்ள 11 இடங்களில் உள்ள மேல் நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் சேகரம் செய்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி 11 இடங்களில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு சுமார் 30 முதல் 40 வருடங்கள் முடிவுற்ற நிலையில் நீர் தேக்கத்தொட்டிக்கு மேல்புறம் ஏற பொருத்தப்பட்ட இரும்பாலான ஏணிகள் சுமார் 8 மேல்நிலை நீர் தேக்கத்தொட்டிக்கு 1)பில்லாஞ்சி OHT, 2) மோட்டூர் OHT, 3).எசையனூர் OHT, 4).ஸ்ரீராம் நகர் OHT,5).அம்மன் குளக்கரை OHT, 6).வாலாஜா ரோடு OHT, 7).நாரைக்குள மேடு OHT, 8). ஸ்ரீராம் நகர் OHT (ஏரி) பயன்படுத்த முடியாமல் பழுது ஏற்பட்டுள்ளது. மேலும், தொட்டியின் உட்பகுதியியை சுத்தம் செய்ய பொருத்தப்பட்டுள்ள ஏணிகள் பழுது ஏற்பட்டுள்ளது, இதனால் மாதாந்திர சுத்தம் செய்யும் பணி தடைப்பட்டுள்ளது. வரும் காலம் வடக்கிழக்கு பருவமழை துவங்கப்பட உள்ள நிலையில் நகர்பகுதியில் டெங்கு நோய் உருவாக காரணமாக உள்ள ஏ.டி.எஸ் கொசுக்கள் உற்பத்தியாகமல் இருக்க ஏதுவாக மேல்நிலைநீர் தேக்க தொட்டிகளை காலமுறை வாரியாக சுத்தம் செய்ய வேண்டியுள்ளது, எனவே மேற்படி 8 மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிகளில் உள்புறம் மற்றும் வெளிபுறம் உள்ள பழுது ஏற்பட்டுள்ள ஏணிகளை மாற்றியமைக்கும் பணி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6.00 இலட்சம் ஆகும். பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு :–<br>மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>(ந.க.எண்.207/2023/இ1) | நகர்மன்றத் தீர்மான எண் .520 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 10.11.2023 | **<u>பொருள்எண்.11</u>**<br>சோளிங்கர் நகராட்சியில் பொன்னை ஆற்றில் இருந்து நீருற்று கிணறுகளில் பெறப்படும் குடிநீர் நகராட்சி பகுதிகளில் உள்ள 27 வார்டுகளில் 9 வார்டுகளுக்கு நகராட்சி அலவலகத்தில் பின்புறம் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் சேமித்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மற்ற 18 வார்டுகளில் அந்தந்த பகுதிகளில் உள்ள நீர் ஆதாரத்தின் மூலம் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு அதே பகுதியில் உள்ள 11 இடங்களில் உள்ள மேல் நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் சேகரித்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சியில் அரசாணை(நிலை)எண். 110 ன் கீழ் அனுமதிக்கப்பட்ட பணியாளர்களில் சோளிங்கர் நகராட்சிக்கு தேற்றுவிக்கப்பட்ட பணியாளர்களில் மின் பணியாளர் 1 எண்ணிக்கை, பராமரிப்பு பணியாளர் இரண்டு எண்ணிக்கையில் மட்டுமே பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண்.21787/2021/இஎ2,நாள்.02.10.2021 இன் சுற்றறிக்கையின் அடிப்படையில் நீரேற்று நிலையம் (பொன்னை நீரேற்று நிலையம்) இயக்கி பாராமரிக்க 2 மின்பணியாளர்கள் மற்றும் 1 பராமரிப்பு உதவியாளர் 15 மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள் பராமரிக்க மேற்படி சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விதிமுறைகளின் படி 7 பராமரிப்பு உதவியாளர்கள் நகராட்சியில் உள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளை பராமரிக்க தேவைப்படுவதால் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் வெளிகொணர்வு மூலம் பணியாளர்களை நியமித்து கொள்ளவும், மேற்படி பணியாளர்களுக்கான ஆண்டு பராமரிப்பு செலவினத் தொகை டிசம்பர் 2023 முதல் நவம்பர் 2024 வரை ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.14.50 இலட்சம் ஆகும். என மேற்கண்ட பணி மேற்கொள்ளவும் செலவினத் தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு :-<br>மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>(ந.க.எண்.207/2023/இ1) | நகர்மன்றத் தீர்மான எண் **521** ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 10.11.2023 | **<u>பொருள்எண்.12</u>**<br>இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டம், திருத்தணி சாலையில் உள்ள வளம்மீட்பு பூங்காவில் செயல்பட்டு வருகிறது, தினசரி 6.9 மெட்ரிக் டன் மக்கும் குப்பை சேகரம் செய்யப்பட்டு இயற்கை உரம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. சேகரம் செய்யப்படும் மக்கும் குப்பையை அரைத்து இயற்கை உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ள 20 H.P திறன் கொண்ட அரவை இயந்திரம் (Bio sherdding Machine) – ஒன்று வாங்க தோராய செலவினம் ரூ.8.50 இலட்சம் ஆகும், ஒப்பந்தப்புள்ளி கோரி தகுதியான நிறுவனத்திடம் பெறவும் அதற்குண்டான செலவினம், பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு :-<br>மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>(ந.க.எண்.1309/2023/எச்1) | நகர்மன்றத் தீர்மான எண் . **522** ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 10.11.2023 | **<u>பொருள்எண்.13</u>**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவு மற்றும் பொறியியல் பிரிவின் வாகனங்களுக்கு 28.08.2022 தேதி முதல் இன்சூரன்ஸ் முடிவடைவதால் அரசு அங்கீகாரம் பெற்ற இன்சூரன்ஸ் நிறுவனத்திலிருந்து விலைப்புள்ளி பெற்று மேல் நடவடிக்கை தொடரவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.1.50 இலட்சம். வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு :-<br>மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>(ந.க.எண்.1286/2023/எச்1) | நகர்மன்றத் தீர்மான எண் . 523 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 10.11.2023 | **<u>பொருள்எண்.14</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.21 முன்னீஸ்வரன் கோயில் பகுதியில் பேவர் பிளாக் அமைக்கும் பணி மேற்கொள்ள ரூபாய் 1.50 இலட்சம் மதிப்பீட்டில் செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு :-<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 539/2023/ இ1) | நகர்மன்றத் தீர்மான எண் . 524 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 10.11.2023 | **<u>பொருள்எண்.15</u>**<br>சோளிங்கர் நகராட்சி 2023-2024 பொதுப்பிரிவு, பொது சுகாதாரப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் நிலையான முன்பண ரூ.5000/- அனுமதித்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக்குறிப்பு :-<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1288 /2023/ சி1) | நகர்மன்றத் தீர்மான எண் .525 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 10.11.2023 | **<u>பொருள்எண்.16</u>**<br>சோளிங்கர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிராம சர்வே எண். 310-ல் 0.64 ஏக்கர் பரப்பில் குடியிறுப்பு மனைப்பிரிவு ஏற்படுத்திய மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடு சாலை மற்றும் மூலை முடுக்குகள் - 537.36 ச.மீ. பொது உபயோர் இடம் (Pp1) 43.91 ச.மீ. மின்சார வாரியத்திற்கு (E.B) - 38.20-ச.மீ. கொண்ட பொது திராவிடம் - 1 -120.56 ச.மீ. மற்றும் பொது திராவிடம் -2. 189.75 ச.மீ. பரப்பு இடங்களை இந்நகராட்சி ஆணையாளர் பெயரில் தான ஆவணம் எண்: 2870 நாள்: 10.08.2023ல் தானமான ஒப்படைக்கப்பட்டது. எனவே, மேற்படி ஒப்படைக்கப்பட்ட பொது ஒதுக்கீடுகள் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.50977/2008/டிபி3 , நாள்.05.02.2021 - படி தானமான ஒப்படைக்கப்பட்ட சொத்து விவரங்களை நகராட்சியின் பராமரிப்பிற்கு ஏற்க ஏதுவாக மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.837/2023/எப்1) | நகர்மன்றத் தீர்மான எண் **.526 தீர்மானம் தள்ளி வைக்கப்படுகிறது.** |

<table>
<tr>
<td>10.11.2023</td>
<td>
<u>பொருள்எண்.17</u><br>
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 19.10.2023ம் தேதிய சுற்றறிக்கையின் சோளிங்கர் நகராட்சியின் டாக்டர்.மு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழா ஜுன் 2023 முதல் ஜுன் 2024 வரை நகராட்சியில் செய்ய வேண்டிய பணிகள் குறித்து அறிவுறை வரப்பட்டது. ஒவ்வொரு நகராட்சியிலும் ஒரு மருத்துவ முகாம், ஒரு நகர்வனம் உருவாக்குதல், 10000 மரக்கன்றுகன் நடுதல், நுண் உர மையம் அமைத்தல், போன்ற பணிகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறை வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவகர்களின் அறிவுரை படி சோளிங்கர் நகராட்சியின் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை</th></tr>
<tr><td>1</td><td>சோளிங்கர் நகராட்சி பகுதியில் வார்டு எண்.22 ல் உள்ள அப்பங்காரகுளத்தில் கிழக்கு மற்றும் வடக்கு பகுதியில் ஒரு நகர்வனம் உருவாக்குதல் பணி.</td><td>ரூ.5,00,000/-</td></tr>
<tr><td>2</td><td>நகராட்சி பகுதியில் உள்ள பூங்காக்கள் மற்றும் சாலையோரம் பத்தாயிரம் மரக்கன்றுகள் நடுதல் பணி மேற்கொள்ளுதல்.</td><td>ரூ.10,00,000 /-</td></tr>
</table>
மேற்படி பணிகள் மேற்கொள்ளவும் செலவினத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.1327/2023/இ1
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண் .527 ஒப்புதல் அளிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>10.11.2023</td>
<td>
<u>பொருள்எண்.18</u><br>
சோளிங்கர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.23 அப்பன்கார குளத்தில் பொது மக்கள் பயன் பெறும் வகையில் 15வது நிதிக்குழு மான்யம் 2020-2021 ஆம் நிதியாண்டில் நடைப்பாதை மற்றும் நடப்பாதை சுற்றிலும் LED விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது, மேற்படி குளத்தை சுற்றியுள்ள நடைப்பாதையில் பொதுமக்கள் அதிகாலை மற்றும் மாலை நேரங்களில் நடைபயிற்சி மேற்கொள்கின்றனர், மேற்படி குளத்தை சுற்றி நடைபெற்றுள்ள நடைப்பாதை பணியினை ஆணையர் அவர்களுடன் ஆய்வு மேற்கொண்ட போது நடைபயிற்சி மேற்கொள்ளும் பொதுமக்கள் நடைப்பாதை சுற்றியுள்ள (உள்பக்கம், வெளிப்பக்கம்) அடர்ந்த முட்புதர்கள் அதிகமாக உள்ளதால் ஏதேனும் விஷ கிருமிகளால் பாதிப்பு ஏற்படுமோ என்ற அச்சத்தில் நடைபயிற்சி மேற்கொள்கிறோம், எனவே நகராட்சி மூலம் நடைப்பயிற்சி சுற்றிலும் உள்ள (உள்பக்கம், வெளிப்பக்கம்) அடர்ந்த முட்புதர்களை அகற்றி கொடுக்குமாறு கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் மேற்படி, நடைப்பாதை சுற்றியுள்ள முட்புதர்களை அகற்ற தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சம் ஆகும். பணி மேற்கொள்ளவும், செலவின
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண் .528 ஒப்புதல் அளிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1326/2023/இ1 | |
| 10.11.2023 | **பொருள்எண்.19**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான இறைச்சி மார்கெட்டில் 30 கடைகள் உள்ளது, இதில் கடைஎண்.3,8,14,15,16 மற்றும் 17 கடைகள் மிகவும் பழுதடைந்து உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ளது இதனால் மேற்காணும் கடைகளுக்கு எவரும் ஏலம் கோர முன்வரவில்லை மேற்காணும் கடைகளுக்கு மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும்தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு :-**<br>1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. 2023-2024 ஆம் நிதியாண்டில் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண்.1325/2023/இ1) | நகர்மன்றத் தீர்மான எண் 529 ஒப்புதல் அளிக்கப்பட்டது |
| 10.11.2023 | **பொருள்எண்.20**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்டுள்ள குத்தகை இனங்களுக்கு மறுஏலம்/மறுஒப்பந்தபுள்ளிகள் 26.09.2023, 06.10.2023, 13.10.2023, 20.10.2023 மற்றும் 27.10.2023-ந் தேதிகளில் மறுஏலம்/மறுஒப்பந்தபுள்ளிகள் கோரியதின் பேரில் கீழ்கண்டுள்ள குத்தகை இனங்களுக்கு எதிரே கண்டுள்ள நபர்கள் உரிய ஏலவைப்புத் தொகை மற்றும் காப்புத்தொகைளை செலுத்தி பொது ஏலத்தில் கலந்து கொண்டனர். | நகர்மன்றத் தீர்மான எண் 530 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

| வ. எண் | குத்தகை இனம் | ஏலத்தில் கலந்துக்கொண்ட நபர்கள் | ஏலம் கோரிய உச்ச கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | பேரூந்து நிலைய கட்டண கழிப்பிடம் | 1. மோ.வைஷாலி, நெ.7/பி. நாரைக் குள மேட்டு தெரு, சோளிங்கர்,<br>2. எஸ்.எல்.பாபு, நெ.3/309, பஜனை கோயில் தெரு, சோளிங்கர்.. | 200000/-<br>199000/- |

| | | | |
|---|---|---|---|
| 2 | ஆடு அடிக்கும் தொட்டி | 1) D.கார்த்திகேயன், நெ.39,M.M.நகர் 5வது தெரு, சோளிங்கர்.<br>2) M.கோதண்டன், நெ.3/359, வன்னியர் தெரு தெரு, சோளிங்கர். | 76500/-<br>76000/- |
| 3 | கொண்டபாளைய கட்டண கழிப்பிடம் | உரிய ஏலவைப்புத் தொகை மற்றும் காப்புத்தொகைளை எவரும் செலுத்தவில்லை | |
| 4 | வாரச்சந்தை முன்புற கடை எண்.11 | உரிய ஏலவைப்புத் தொகை மற்றும் காப்புத்தொகைளை எவரும் செலுத்தவில்லை | |
| 5 | குறிஞ்சி மோட்டல் வடக்கு பக்கம் கடை எண்.4 | | |
| 6 | குறிஞ்சி மோட்டல் வடக்கு பக்கம் கடை எண்.5 | | |
| 7 | குறிஞ்சி மோட்டல் மேற்கு பக்கம் கடை எண்.3 | | |
| 8 | இறைச்சி மார்கெட் கடை எண்.3 | | |

மேற்படி எட்டு குத்தகை இனங்களுக்கு ஒப்பந்தபுள்ளிகள் எவரும் கொடுக்கப்படவில்லை.

வரிசை எண்.3 முதல் 8 ல் கண்டுள்ள குத்தகை இனங்களுக்கான ஏலத்தில் எவரும் கலந்துக்கொள்ளவில்லை.

வரிசை எண்.1ல் கண்டுள்ள நகராட்சி எல்லைக்குட்பட்ட பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு பொது ஏலத்தில் கலந்துக்கொண்ட திருமதி.மோ.வைஷாலி, என்பவர் உட்சபச்ச ஏலக் கேள்வி தொகை ரூ,200000/- கோரியுள்ளதால் அவர்களுக்கு குத்தகை வசூல் செய்யும் உரிமை ஒப்படைக்கவும் மற்றும் வரிசை எண்.2ல் கண்டுள்ள இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆடுதொட்டி சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு பொது ஏலத்தில் கலந்துக்கொண்ட D.கார்த்திகேயன், என்பவர் உட்சபச்ச ஏலக் கேள்வி தொகை ரூ,76500/- கோரியுள்ளதால் அவர்களுக்கு

<table>
<tr>
<td></td>
<td>குத்தகை வசூல் செய்யும் உரிமை ஒப்படைக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு :–<br>1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. வரிசை எண்.01 –ல் கண்டுள்ள குத்தகை இனம் கடந்த மூன்று வருடங்களாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை. மேலும் இக்கட்டண கழிப்பிடத்தில் தூய்மை பணியாளர் ஒருவர் அமர்த்தப்பட்டுள்ளார். அன்னாருக்கு மாத சம்பளம் தொகை ரூ.49880/– மேலும் கட்டண கழிப்பிடத்திற்கு 100மீட்டர் தொலைவில் பொது இலவச கழிப்பிடம் உள்ளது. பொது இலவச கழிப்பிடம் மற்றும் பணியாளரின் சம்பளம் ஆகியவைகளை கருத்தில் கொண்டு குத்தகை தொகை குறைவாக விடப்பட்டுள்தையும் ஏற்று பேரூந்து நிலைய கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு பொது ஏலத்தில் கலந்துக்கொண்ட திருமதி.மோ.வைஷாலி, என்பவர் உட்சபச்ச ஏலக் கேள்வி தொகை ரூ,200000/– கோரியுள்ளதால் அவர்களுக்கு குத்தகை வசூல் செய்யும் உரிமை ஒப்படைக்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். வரிசை எண்–2–ல் கண்டுள்ள குத்தகை இனம் கடந்த ஒரு வருடங்களாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆடுதொட்டி சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு பொது ஏலத்தில் கலந்துக்கொண்ட D.கார்த்திகேயன், என்பவர் உட்சபச்ச ஏலக் கேள்வி தொகை ரூ,76500/– கோரியுள்ளதால் அவர்களுக்கு குத்தகை வசூல் செய்யும் உரிமை ஒப்படைக்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>3. மேற்படி வரிசை எண்.01 மற்றும் 02க்கு வசூலிக்கும் உரிமத்திற்கு குத்தகை அனுமதித்தும், மற்றும் வரிசை எண். 3 முதல் 8 வரையிலான கடைகளுக்கு மறுஏலம்/ஒப்பந்தபுள்ளி கோரவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>4. குத்தகை இனத்தின் அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>(ந.க.எண்.0067/2023/அ1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>10.11.2023</td>
<td><u>பொருள்எண்.21</u><br>சோளிங்கர் நகராட்சி பகுதியில் இயங்கி வரும் பள்ளி கட்டிடங்களை அவற்றின் அமைவிடத்துடன் சோளிங்கர் நகராட்சிக்கு ஒப்படைக்கும் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை கடிதம் ந.க.எண்.14262/22/டிபி–2 நாள்.18.07.2022. அவர்களின் கடிதம் மற்றும் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) இராணிப்பேட்டை கடிதம் ந.க..எண்.அ2/3612/22 நாள்.27.10.2022. ன் படி கடிதம் அனுப்பப்பட்டது, அதனை தொடர்ந்து சோளிங்கர் ஊராட்சி ஒன்றிய குழு கூட்டம் தீர்மான எண்.147 நாள்.15.02.2023 மற்றும் சோளிங்கர் ஊராட்சி ஒன்றிய ஆணையரின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.2904/23/அ2 நாள்.24.03.2023 ன் அடிப்படையில் சோளிங்கர் நகராட்சிக்கு கீழ்கண்ட பள்ளிகள் ஒப்படைக்கப்பட்டது,<br>
<table>
<tr><th>வ. எ ண்</th><th>பள்ளியின் பெயர் மற்றும் அமைவிடம்</th></tr>
</table>
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண் .531 ஒப்புதல் அளிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>பில்லாஞ்சி ஊ.ஒ.தொ.பள்ளி கட்டடம் அதன் அமைவிடம்</td></tr>
<tr><td>2</td><td>எசையனூர் ஊ.ஒ.தொ.பள்ளி கட்டடம் அதன் அமைவிடம்</td></tr>
<tr><td>3</td><td>சோளிங்கர் மோட்டூர் ஊ.ஒ.ந.பள்ளி கட்டடம்அதன் அமைவிடம்</td></tr>
<tr><td>4</td><td>சோளிங்கர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி கட்டடம் அதன் அமைவிடம் (பாட்டிகுளம் அருகில்)</td></tr>
<tr><td>5</td><td>சோளிங்கர் ஊராட்சி ஒன்றிய தொடக்கபள்ளி ஏற்கனவே இதில் ஒரு பகுதி மாவட்ட கிளை நூலகத்திற்கு வழங்கப்பட்டு கட்டடம் உள்ளது தவிர எஞ்சியுள்ள பகுதி கட்டடம், (பள்ளி கட்டடம் செயல்படவில்லை)</td></tr>
<tr><td>6</td><td>ஸ்ரீராம் நகர் ஊ.ஒ.ந.பள்ளி கட்டடம் அதன் அமைவிடம்</td></tr>
</table>
அதனை தொடர்ந்து மேற்படி பள்ளி கட்டிடங்களை நகராட்சி பராமரிப்பில் எடுத்து செயல்படுத்திட சோளிங்கர் நகராட்சி தீர்மான எண்.428, நாள்.11.09.2023 இல் அனுமதி வழங்கப்பட்டது. எனவே, மேற்காணும் பள்ளிகளை நடப்பாண்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சியின் மூலம் பெறப்படும் சொத்துவரியில் இருந்து கல்வி நிதியினை பகுதி தொகையாக பிரித்து கல்வி நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ள வழி வகை செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு:<br>
மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண். 594/2022/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>10.11.2023</td>
<td><u>பொருள்எண்.22</u><br>
சோளிங்கர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திருமணம், பிறந்தநாள் விழா, மத விழா, அரசியல் கட்சி விளம்பரங்கள் மற்றும் கோயில் திருவிழா போன்ற நிகழ்ச்சிகளுக்கு வைக்கப்பட்டு விளம்பர பதாகைகள் (Digital Banner) மற்றும் பலகைகள் (placards) அமைப்பதற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 1998 (திருத்தப்பட்டது) 2022 மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் உள்ளாட்சி அமைப்பு விதிகள், 2023– பிரிவு 328, 329 மற்றும் 330 ன் கீழ் நகராட்சியில் டிஜிட்டல் பேனர்கள் மற்றும் பலகைகள் அனுமதி பெற்றபின் வைக்கப்பட வேண்டும், இல்லையெனில் தகவலின்றி அப்புறப்படுத்தப்படும் என்பது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளின் சட்டம் 1998 நகல்.<br>
(ந.க.எண்.1064/2023/எப்1)
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண் .532 ஒப்புதல் அளிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>10.11.2023</td>
<td><u>பொருள்எண்.23</u><br>
இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 யாதவ தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள ரூபாய் 8.50 இலட்சம் மதிப்பீட்டில் செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக்குறிப்பு :–
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண் .533 ஒப்புதல் அளிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 946/2023/ இ1) | |
| 10.11.2023 | **<u>பொருள்எண்.24</u>** | நகர்மன்றத் தீர்மான எண் **.534** ஒப்புதல் அளிக்கப்பட்டது |

சோளிங்கர் நகராட்சியில் பொது நிதி 2023–2024 கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 08.11.2023–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பணியின் பெயர் | தொகை ரூ. | குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | அதிகம் அளிக்கப்பட்ட ஒப்பந்தாரர் பெயர் /ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | பேருந்து நிலையத்தில் பொது மக்கள் பயன் பெறும் வகையில் புதியதாக நாற்காலி அமைக்கும் பணி | 1,00,000 | எஸ்.எல்.பாபு 0.15 % மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 1.00% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | வார்டு எண்.20 முன்னீஸ்வரன் கோயில் செல்லும் சாலை பழுதுபார்க்கும் பணி | 5,00,000 | எஸ்.எல்.பாபு 0.25 % மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.75% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | வார்டு எண்.18 சன்னதி தெருவில் உள்ள கைபம்பு அகற்றி ஆழ்துளை கிணற்றிற்கு மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி | 1,00,000 | கே.சுந்தர்ராஜன் 0.30 % மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.90% மதிப்பீட்டை விட அதிகம் |
| 4. | வார்டு எண்.23 அரக்கோணம் ரோடு மற்றும் வாலாஜா சாலை பைப்லைன் பழுதுபார்க்கும் பணி மற்றும் சின்டெக்ஸ் அமைக்கும் பணி | 1,00,000 | எஸ்.எல்.பாபு 0.25 % மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 1.50% மதிப்பீட்டை விட அதிகம் |
| 5. | வார்டு எண்.27 புஜங்கராவ் தெருவில் உள்ள கிணற்றின் மீது கம்பி வளை அமைக்கும் பணி | 50,000 | எம்.கோதண்டன் 0.20 % மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.75% மதிப்பீட்டை விட அதிகம் |
| 6. | பேருந்து நிலையத்தில் தெற்கு பக்கம் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் இல்லாத கழிவறையை வணிக கடையாக மாற்றம் செய்து பயன்பாட்டிற்கு | 1,00,000 | எஸ்.எல்.பாபு 0.30 % மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.80% மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொண்டு வரும் பணி | | | |
| 7. | குடிநீர் வசதி ஏற்படுத்த 5 எண்ணிக்கையில் 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் தொட்டி மற்றும் ஸ்டேன்டு(STAND) சப்ளை செய்யும் பணி | 1,00,000 | எஸ்.எல்.பாபு 0.40 % மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 1.20% மதிப்பீட்டை விட அதிகம் |
| 8. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பூங்காக்கள் சுத்தம் செய்து மரம் நடுதல் மற்றும் மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் மற்றும் தரைதள நீர்தேக்கத் தொட்டிகளின் சுற்றுப்புறத்தை சுத்தம் செய்து பராமரிப்பு பணி | 2,00,000 | எஸ்.எல்.பாபு 0.30 % மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 1.00% மதிப்பீட்டை விட அதிகம் |
| 9. | வார்டு எண்.10 கணபதி முதலி தெருவில் உள்ள பைப்லைன் பழுதுபார்க்கும் பணி | 1,00,000 | எஸ்.எல்.பாபு 0.25 % மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 1.10% மதிப்பீட்டை விட அதிகம் |
| 10. | வார்டு எண்.05 பில்லாஞ்சியில் உள்ள காமாட்சி நகர், திமீர் நகர் மற்றும் சோமசமுத்திரம் சாலையில் பொது மக்கள் பயன் பெறும் வகையில் பொன்னை ஆற்று குடிநீருடன் இணைத்து சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி | 1,00,000 | எஸ்.எல்.பாபு 0.25 % மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.90% மதிப்பீட்டை விட அதிகம் |
| 11. | அலுவலகத்திற்கு புதியதாக வரப்பெற்றுள்ள பணியாளர்களுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் தேவையான நாற்காலிகள், கணினி மேசைகள் மற்றும் பிரோக்கள் சப்ளை செய்யும் பணி | 2,00,000 | எஸ்.எல்.பாபு 0.35 % மதிப்பீட்டை விட குறைவு | எம்.ரகு 0.75% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக்குறிப்பு :–

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.964/2023/இ1)

| | | |
|---|---|---|
| 10.11.2023 | **பொருள்எண்.25 (சிறப்பு தீர்மானம்)**<br>கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிற்கு சோளிங்கர் நகராட்சிக்கு குடிநீர் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள தொகை ரூ.47.58 கோடியில் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கியமைக்கு சோளிங்கர் நகராட்சின் நகரமன்ற தலைவர், நகரமன்ற துணைத்தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் சார்பாக இந்நகரமன்றம் மனமார்ந்த நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான என் .535 ஒப்புதல் அளிக்கப்பட்டது |

(ஓம்)தமிழ்செல்வி அசோகன்
நகர மன்ற தலைவர்
சோளிங்கர் நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்
சோளிங்கர் நகராட்சி